பெரியாழ்வார் அருளிச் செய்த
பெரியாழ்வார் திருமொழி
மூன்றாம் பத்து

நான்காம் திருமொழி - தழைகளும்
காலிப் பின்னே வரும் கண்ணனைக் கண்டு இடைக்கன்னியர் காமுறுதல்

** தழைகளும் தொங்கலும் ததும்பி எங்கும் *
தண்ணுமை எக்கம் மத்தளி தாழ் பீலி *
குழல்களும் கீதமுமாகி எங்கும் *
கோவிந்தன் வருகின்ற கூட்டம் கண்டு **
மழை கொலோ வருகின்றதென்று சொல்லி *
மங்கைமார் சாலக வாசல் பற்றி *
நுழைவனர் நிற்பனராகி எங்கும் *
உள்ளம் விட்டு ஊண் மறந்து ஒழிந்தனரே 1

வல்லி நுண் இதழன்ன ஆடை கொண்டு *
வசை அறத் திருவரை விரித்துடுத்து *
பல்லி நுண் பற்றாக உடைவாள் சாத்திப் *
பணைக்கச்சு உந்திப் பல தழை நடுவே *
முல்லை நல் நறுமலர் வேங்கை மலர்
அணிந்து * பல்லாயர் குழா நடுவே *
எல்லியம் போதாகப் பிள்ளை வரும் *
எதிர் நின்றங்கு இனவளை இழவேன்மினே 2

சுரிகையும் தெறிவில்லும் செண்டுகோலும் *
மேலாடையும் தோழன்மார் கொண்டோட *
ஒரு கையால் ஒருவன் தன் தோளை ஊன்றி *
ஆநிரை இனம் மீளக் குறித்த சங்கம் **
வருகையில் வாடிய பிள்ளை கண்ணன் *
மஞ்சளும் மேனியும் வடிவும் கண்டாள் *
அருகே நின்றாள் என் பெண் நோக்கிக் கண்டாள் *
அது கண்டு இவ்வூர் ஒன்று புணர்க்கின்றதே 3

குன்றெடுத்து ஆநிரை காத்த பிரான் *
கோவலனாய்க் குழல் ஊதியூதி *
கன்றுகள் மேய்த்துத் தன் தோழரோடு *
கலந்துடன் வருவானைத் தெருவில் கண்டு **
என்றும் இவனை ஒப்பாரை நங்காய் *
கண்டறியேன் ஏடி! வந்து காணாய் *
ஒன்றும் நில்லா வளை கழன்று *
துகில் ஏந்திள முலையும் என் வசம் அல்லவே 4

சுற்றி நின்று ஆயர் தழைகள் இடச் *
சுருள் பங்கி நேத்திரத்தால் அணிந்து *
பற்றி நின்று ஆயர் கடைத்தலையே *
பாடவும் ஆடக் கண்டேன் ** அன்றிப் பின்
மற்றொருவர்க்கு என்னைப் பேசல் ஒட்டேன் *
மாலிருஞ்சோலை எம் மாயற்கல்லால் *
கொற்றவனுக்கு இவளாம் என்றெண்ணிக் *
கொடுமின்கள் கொடீராகில் கோழம்பமே 5

சிந்துரம் இலங்கத் தன் திருநெற்றி மேல் *
திருத்திய கோறம்பும் திருக்குழலும் *
அந்தரம் முழவத் தண்தழைக் காவின் கீழ் *
வரும் ஆயரோடு உடன் வளை கோல் வீச **
அந்தம் ஒன்றில்லாத ஆயப்பிள்ளை *
அறிந்தறிந்து இவ்வீதி போதும் ஆகில் *
பந்து கொண்டான் என்று வளைத்து வைத்துப் *
பவள வாய் முறுவலும் காண்போம் தோழீ! 6

சாலப் பல் நிரைப் பின்னே தழைக் காவின் கீழ் *
தன் திருமேனி நின்றொளி திகழ *
நீல நல் நறுங்குஞ்சி நேத்திரத்தால் அணிந்து *
பல்லாயர் குழாம் நடுவே **
கோலச் செந்தாமரைக் கண் மிளிரக் *
குழலூதி இசை பாடிக் குனித்து * ஆயரோ
டாலித்து வருகின்ற ஆயப்பிள்ளை *
அழகு கண்டு என் மகள் அயர்க்கின்றதே 7

சிந்துரப் பொடிக் கொண்டு சென்னி அப்பித் *
திருநாமம் இட்டு அங்கோர் இலையந்தன்னால் *
அந்தரம் இன்றித் தன் நெறி பங்கியை *
அழகிய நேத்திரத்தால் அணிந்து **
இந்திரன் போல் வரும் ஆயப்பிள்ளை *
எதிர் நின்று அங்கு இனவளை இழவேல் என்ன *
சந்தியில் நின்று கண்டீர் * நங்கை தன்
துகிலொடு சரிவளை கழல்கின்றதே 8

வலங்காதின் மேல்தோன்றிப் பூவணிந்து *
மல்லிகை வனமாலை மௌவல் மாலை *
சிலிங்காரத்தால் குழல் தாழ விட்டுத் *
தீங்குழல் வாய்மடுத்து ஊதியூதி **
அலங்காரத்தால் வரும் ஆயப்பிள்ளை *
அழகு கண்டென் மகள் ஆசைப்பட்டு *
விலங்கி நில்லாது எதிர் நின்று கண்டீர் *
வெள்வளை கழன்று மெய்ம்மெலிகின்றதே 9

** விண்ணின் மீது அமரர்கள் விரும்பித் தொழ *
மிறைத்து ஆயர்பாடியில் வீதியூடே *
கண்ணன் காலிப் பின்னே எழுந்தருளக் கண்டு *
இளவாய்க் கன்னிமார் காமுற்ற
வண்ணம் ** வண்டமர் பொழில் புதுவையர் கோன் *
விட்டுசித்தன் சொன்ன மாலை பத்தும் *
பண்ணின்பம் வரப் பாடும் பத்தர் உள்ளார் *
பரமான வைகுந்தம் நண்ணுவரே 10

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்